# கடன் பாக்கி

## உங்கள் பணத்தை நிர்வகித்தல் மெய்த்தகவல் தாள்



## கடன் பாக்கி என்றால் என்ன?

நீங்கள் பணத்தைக் கடனாக வாங்கினாலோ அல்லது செலுத்தப்படாத பில்கள் வைத்திருந்தாலோ கடன் பாக்கி உருவாக்கப்படுகிறது.

## நான் எப்படி கடன் பாக்கிக்கு உள்ளாகிறேன்?

நீங்கள் கடன் கொடுப்பவரிடமிருந்து (கடன் வழங்குவோர்) பணம் கடன் வாங்கினால் நீங்கள் கடன் பாக்கிக்கு உள்ளாகிறீர்கள். இந்தப் பணத்தை நீங்கள் வட்டி போன்ற கூடுதல் செலவுடன் திருப்பித் தர வேண்டும்.

கடன் பாக்கிகள் என்பது சேவைகளுக்கு நீங்கள் செலுத்தாத பணமாகவும் இருக்கலாம். அது ஒரு மின்சாரக் கட்டண பில், ஒரு கைத் தொலைபேசி பில் அல்லது ஒரு இணைய பில்லாகவும் இருக்கலாம்.

உங்கள் கடன் பாக்கியைச் செலுத்துவதில் உங்களுக்கு பிரச்சினைகள் இருந்தால் நீங்கள் செய்யக்கூடிய காரியங்கள் சில உண்டு:

- உங்களுக்கு எவ்வளவு முடியுமோ அதைத் தொடர்ந்து செலுத்துங்கள்
- யாருக்குப் பணம் கொடுக்க வேண்டுமோ அவர்களைத் தொடர்பு கொண்டு உங்களுக்கு பணம் செலுத்துவதில் உள்ள பிரச்சினைகளைத் தெரியப்படுத்துங்கள்
- இலவச நிதி ஆலோசகர் ஒருவரிடமிருந்து உதவி பெறுங்கள். உங்கள் கடன் பாக்கியை நிர்வகிப்பதில் அவர் உங்களுக்கு உதவுவார்.

## நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்

- கடன் பாக்கி என்பது நீங்கள் கொடுக்க வேண்டிய பணம். அது திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.
- உங்கள் கடன் பாக்கியை நீங்கள் திரும்பச் செலுத்தத் தவறினால், நீங்கள் சட்டப் பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியதிருக்கும்.
- நீங்கள் உங்கள் கடன் பாக்கியைச் செலுத்தவில்லையென்றால், அதிகப் பணம் செலுத்த வேண்டியதிருக்கும்.

## எங்கே உதவி மற்றும் மேலதிகத் தகவல்களைப் பெறுவது

உங்களுக்குப் பணப்பிரச்சினைகள் இருந்தால், இலவச நிதி ஆலோசகரை 1800 007 007 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள்.

நிதி ஆலோசகர்கள் மற்றும் உங்கள் கடன் பாக்கியை நிர்வகிப்பதைப் பற்றிய மேலதிக விவரங்களுக்கு, MoneySmart இணையதளமான **www.moneysmart.gov.au** என்ற முகவரிக்குச் செல்லுங்கள் அல்லது 1300 300 630 என்ற எண்ணுக்கு அழையுங்கள்.

### லூயிஸ் தன்னுடைய எல்லா கடன் அட்டைக் கடன் பாக்கிகளைச் செலுத்தி விடுகிறார்

லூயிஸ் உள்ளூர்ச் சந்தையில் தன்னுடைய ஓவியங்களை விற்பனை செய்யும் சிறுதொழிலை நிர்மாணிக்கிறார். அதைத் தொடங்குவதற்கு அவருக்கு வண்ணங்கள், வண்ணத்தூரிகைகள் மற்றும் பல பொருட்கள் தேவைப்படுகின்றன.

லூயிஸிடம் சேமிப்பு ஏதும் இல்லை. அவர் எல்லாவற்றையும் வாங்க தன்னுடைய கடன் அட்டையைப் பயன்படுத்துகிறார். தன் கடன் அட்டையின் மூலம் 1200 டாலர்கள் கடன் பெறுகிறார். தன்னுடைய எல்லா ஓவியங்களையும் விற்றுவிட்டால், கடன் அட்டையில் எவ்வளவு கடன் இருக்கிறதோ அதைத் திருப்பிச் செலுத்திவிட முடியும். அத்துடன் கூடுதல் பணத்தையும் பெற்றிட முடியும் என எண்ணுகிறார்.

சந்தையில் லூயிஸ் சில ஓவியங்களை மட்டுமே விற்றார். அதில் அவருக்கு 720 டாலர்கள் மட்டுமே கிடைத்தன. கடன் அட்டைக் கடனை முழுவதுமாகச் செலுத்திவிட இது போதுமான பணம் இல்லை என்பதை லூயிஸ் அறிவார். உள்ளூர்ச் சந்தையில் சம்பாதித்ததில் கொஞ்சப் பணம் இன்னும் கூடுதல் வண்ணங்கள் வாங்க அவருக்குத் தேவைப்பட்டது. லூயிஸுக்கு என்ன செய்வதென்பதே தெரியவில்லை.

பின்னர் அந்த இரவில் லூயிஸின் நண்பர் ரியோன் அங்கு வந்தார். சந்தையில் வியாபாரம் எப்படி இருந்ததென ரியோன் லூயிஸைக் கேட்டார். லூயிஸ் தன்னுடைய கடன் அட்டையில் வாங்கிய கடன் அனைத்தையும் செலுத்தும் அளவுக்கு போதுமான பணத்தை சம்பாதிக்கவில்லை என விளக்கினார்.

கடன் பாக்கியை நிர்வகிக்கச் சிறந்த வழி வரவுசெலவுத் திட்டம் தீட்டுவதுதான் என்று ரியான் லூயிஸிடம் கூறினார். அதுவே எவ்வளவு கடன் பாக்கி உள்ளது மற்றும் எவ்வளவு பணம் செலுத்த முடியும் என்பதை லூயிஸ் அறிந்து கொள்ள உதவும். மேலும் தன் கடன் பாக்கியைச் செலுத்தி முடிக்க எவ்வளவு காலம் ஆகும் என்பதையும் லூயிஸ் அறிய முடியும் என்று ரியான் சொன்னார்.

சந்தையிலிருந்து கிடைக்கும் லூயிஸின் வருமானத்தை ரியான் எழுதினார். அதன்பின் வண்ணம், வண்ணத்தூரிகைகள், சந்தையில் அவரது வாடகை உட்பட அனைத்துக்கும் லூயிஸ் செலுத்த வேண்டிய பணம் அத்துடன் அவரது கடன் அட்டையில் வாங்கிய கடன் பாக்கிக்காக அவர் செலுத்த வேண்டிய மாதக் கட்டணம் அனைத்தையும் எழுதினார்.

தற்போது எல்லாம் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக லூயிஸ் உணருகிறார். தன்னுடைய கடன் அட்டையில் வாங்கிய கடன் பாக்கியைச் செலுத்தி முடிக்க ஒவ்வொரு மாதமும் எவ்வளவு செலுத்த வேண்டும் என்பதை அவர் அறிகிறார். 3 மாதங்களில் அவருக்கு கடன் பாக்கி எதுவும் இருக்காது என்று லூயிஸ் கணக்கிட்டுள்ளார்.

MONEYSMART

© ASIC 2012 அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

This page has been intentionally left blank.

© ASIC 2012 அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை